
# இதழியல் துறையில் ஒரு புரட்சி! பெருமிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!


இதழியல் நிறுவனத்தை தொடங்கி வைக்கும் முதல்வர் ஸ்டாலின் - உடன் ஆசிரியர் வீரமணி, துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் சாமிநாதன், மா.சு.

இதழியல் துறையில் உண்மையும் அறமும் ஒருசேர பயணித்து சர்வதேச அளவிலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் நோக்கத்தில் தமிழகத்தில் முதன்முறையாக இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறது தி.மு.க. அரசு. இந்த நிறுவனத்தை 25ந் தேதி தொடங்கிவைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்வில் துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின், செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, இதழியல் நிறுவனத்தின் தலைவர் ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், தமிழக அரசின் மாநிலத் திட்ட குழுத் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், மூத்த பத்திரிகையாளர்கள் நக்கீரன்கோபால், குணசேகரன், ப.திருமாவேலன், கார்த்திகைச்செல்வன், செய்தித் துறையின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.


மு.பெ. சாமி நாதன்
செய்தித் துறை அமைச்சர்


இதழியல்துறை தலைவர் ரவி


ஏ.எஸ். பன்னீர் செல்வம்

ஓராண்டு இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பு (PG Diploma in Journalism) 2025-2026 கல்வியாண்டான இந்த வருடம் முதல் தொடங்கியுள்ளது. இதழியல் கல்வியை உலகத் தரத்திற்கு உயர்த்துவதும், தமிழக மாணவர்களை மிகச் சிறந்த இதழாளர்களாகவும், கல்வியாளர்களாகவும் உருவாக்குவதே இதன் நோக்கமாகும். படைப்பாற்றலையும், பல்துறை திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும் செயல்திறன் கூடிய நவீன கல்வி முறையை இந் நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது.

இந்திய அளவில் இண்டியன் இன்ஸ்டியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேசன் எனும் அரசு நிறுவனத்தை இதழியலுக்காக ஒன்றிய அரசின் தகவல் தொடர்புத் துறை நடத்தி வருகிறது. ஆனால், எந்த ஒரு மாநில அரசும் இப்படி ஒரு கல்வி நிறுவனத்தை நடத்தவில்லை. அந்த வகையில், தமிழக பட்டதாரிகளுக்காக இந்த நிறுவனத்தை தி.மு.க. அரசு தொடங்கியிருப்பது தேசிய அளவில் உற்றுநோக்கப்படுகிறது.

இதழியல் துறைக்காக சிறப்பான ஒரு கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டிருப்பது குறித்து செய்தித்துறை அமைச்சர் சாமிநாதனை சந்தித்துப் பேசியபோது, "சுதந்திரத்தின் பயன்பாட்டை புரிந்துகொள்ள இதழியல் துறை பெரும் பங்காற்றுகிறது. தரவுகளின் அடிப்படையில் கொடுக்கப்படும் நம்பிக்கைக்குரிய செய்திகளே உரிமைக் கான முதல்படி. அதனை இலக்காகக் கொண்டு உண்மையும் அறமும் நேர்மையும் இதழியல் துறையில் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த நிறுவனத்தை தொடங்கியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.



இதழியல் துறையில் முழுமையான பயிற்சிபெற்று திறமையான பத்திரிகையாளர்களாக, ஊடக வியலாளர்களாக, கல்வியாளர்களாகத் தமிழக மாணவர்கள் உருவாவதற்கு இந்த நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இதழியல் துறை என்பது மெத்தப் படித்தவர்களுக்கும், வசதி படைத்தவர்களுக்குமே உரியது என்கிற மாயையில், அதெல்லாம் எட்டாக்கனி என நினைத்துக்கொண்டிருக்கும் ஏழை மாணவர் களுக்கு, இதழியல் துறை உங்களுக்கு எட்டும் கனிதான் என்கிற நம்பிக்கையை விதைப்பதற்கான முயற்சிதான் இந்த நிறுவனம் மிக மிகக் குறைவான கட்டணத்தில் சர்வதேச அளவிலான பாடத் திட்டங்கள் இங்கு பயிற்றுவிக்கப்பட விருக்கிறது.

இந்தத் துறையில் சேர்வதற்கு நடப்பாண்டில் 90 மாணவ-மாணவிகள் விண்ணப்பித்தனர். அவர்களில் தகுதியின் அடிப்படையிலும் இடஒதுக்கீட்டின் அளவு கோலிலும் 60 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது ஒரு வருட முதுநிலை பட்டயப் படிப்பு. இந்த படிப்பு இரண்டு செமஸ்டர்களை உள்ளடக்கியது. பயிலும் மாணவ - மாணவிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன" என்கிறார் பெருமிதமாக.

இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வனை சந்தித்துப் பேசியபோது, "தமிழக அரசின் மாநிலத் திட்டக்குழு, கடந்த 2022-23 நிதியாண்டில் அரசுத் துறைகளில் நமக்கான இடைவெளி எங்கெல்லாம் இருக்கிறது என ஒரு ஆய்வை மேற்கொண்டபோது, தமிழகத்தில் இதழியல் துறையில் மாறுபட்ட சூழல் இருப்பதை கண்டறிந்தது. குறிப்பாக, பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இதழியல் பட்டப்படிப்பு இருந்தாலும், ஒன்றிய அரசு மற்றும் யூ.ஜி.சி. யின் தலையீடுகள் இருக்கவே செய்கின்றன. இதழியல் துறையில் சுதந்திரமும், நேர்மையும் அவசியம். அதனால், தமிழக மாணவர்களுக்காக நாமே ஒரு கல்வி நிறுவனத்தை தொடங்கலாம் என்கிற கொள்கை முடிவின்படி உருவானதுதான் இந்த நிறுவனம்.

இன்றைய ஊடகம், அச்சு, ஒலி-ஒளிபரப்பு, இணையம் என பல்வேறு தளங்களில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனை யொட்டி, வளர்ந்து வரும் சமூக ஊடகப் பார்வையையும் இணைத்து தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் திறமையான இதழாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்திக்கொள்கிறது இதழியல் கல்வி நிறுவனம். தமிழும் ஆங்கிலமும் தெரிந்த சர்வதேச நிபுணர்களைக் கொண்டு கல்வி கற்றுத்தரப்படுகிறது. அதற்கேற்ப பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறந்த இதழாளர்கள், நிபுணர்கள், அறிஞர்கள், செயற்கை நுண்ணறிவு, அறிவியல், சமூக அறிவியல், சட்டம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறை களிலிருந்து வல்லுநர்களையும் அழைத்து சிறப்பு வகுப்புகள் எடுக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனம், நிறுவன சட்டவிதிகளின்படி பதிவு செய்யப்பட்டிருப்பதால், தனித்த அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பாகும். அரசு தலையீடோ, அரசியல் தலையீடோ துளியளவு கூட இருக்காது. நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மட்டுமே அரசின் செயல்பாடாக இருக்கும். மேலும், அரசின் இடஒதுக்கீடு முறையை முழுமையாக கடைப்பிடிக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், தமிழகத்திலுள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டின் அளவைவிட அதிகமாகவே இந்த முறை மாணவ - மாணவிகளை சேர்த்திருக்கிறோம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கொடுக்கப்பட 1 இடம் வேண்டிய பழங்குடியினருக்கு 2 இடங்கள் தரப்பட்டுள்ளது. அதேபோல, 9 இடங்கள் தரப்பட வேண்டிய பட்டியிலினத்தவர்க்கு 15 இடங்களும், 16 இடங்கள் தரப்பட வேண்டிய பிற்படுத்தப்பட்டோருக்கு 31 இடங்களும், 12 இடங்கள் தரப்பட வேண்டிய மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 14 இடங்களும் அதிகரித்துத் தந்திருக்கிறோம். அதே போல, பொதுப்பட்டியலில் போட்டியிடும் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அவர்களுக்கான இட ஒதுக்கீட்டு சலுகைகள் எந்த வடிவத்திலும் மறுக்கப்படவில்லை.

கல்விக்கட்டணம் என்கிற முக்கியமான ஒரு விசயம் இருக்கிறது. அதாவது இதழியல் கல்வி நடத்தும் ஒன்றிய அரசின் நிறுவனத்தில் பி.ஜி.டிப்ளமோ படிப்பை படிக்க வருடத்துக்கு 1,15,000 ரூபாயை கல்விக்கட்டணமாக வசூலிக்கிறது ஒன்றிய அரசு.

தனியார் கல்வி நிறுவனங்கள் குறைந்தபட்சம் 3 லட்சத்திலிருந்து 5 லட்சம் ரூபாய் வசூலிக்கின்றன. ஆனால், இதே பி.ஜி.டிப்ளமோ படிப்பை தமிழக அரசின் இதழியல் கல்வி நிறுவனம் ஆண்டுக்கு 10,000 ரூபாய் மட்டுமே கல்விக்கட்டணமாக நிர்ணயித்திருக்கிறது.

இதழியல் துறையில் இந்திய மொழிகளுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் தமிழ்மொழிக்கு இல்லை. ஆங்கில இதழியலுக்கும் தமிழ் இதழியலுக்குமான இடைவெளி அதிகம். அதனை குறைத்து, வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வது இந்த நிறுவனத்தின் தலையாய பணி. நிச்சயம் இதழியல் துறையில் ஒரு புரட்சியும் மறுமலர்ச்சியும் இந்த நிறுவனம் ஏற்படுத்தும்" என்கிறார் உணர்வுப்பூர்வமாக!

நன்றி :
'நக்கீரன்'
ஆக 30- செப்.2

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 194 வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,செப்.2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 194 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (01.09. 2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 99 பிரிக்கிளின் சாலை, மாநகர் சந்திப்பு. 2) வட்டம் 99 அ டாக்டர் அழகப்பா சாலை லேடர்ஸ் கேட் மெயின் சந்திப்பு, ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி.அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரி கிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் அவசரக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசரச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (03.09.2025 - புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில், ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் - கண்டோன்மெண்ட் ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1) வருகிற 08.09.2025 அன்று காலை சென்னை திரும்பும் முதல்வர் - கழகத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது குறித்தும்,

2) வருகிற 10.09.2025 அன்று செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பது குறித்தும்,

3) கழக வளர்ச்சிப் பணிகள்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

# மாதவரம் எஸ்.சுதர்சனம் மாமனார் எம்.சி. தேவராஜ் மறைவு!

## அன்பகம் கலை - ப.ரங்கநாதன் - சட்டமன்ற உறுப்பினர்கள் அஞ்சலி!

சென்னை, செப். 02 -

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் மாமனார் எம்.சி.தேவராஜ் (வயது 95) அவர்கள் நேற்று முன்தினம் (31.08.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்குத் தலைவர் ப.ரங்கநாதன், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பூந்தமல்லி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மதுரவாயல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன், செயற்குழு உறுப்பினர் மிசா மதிவாணன்

மாவட்ட துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன், திருவொற்றியூர் 1 வது மண்டலக் குழுத் தலைவர், திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு, 3 வது மண்டலக் குழுத் தலைவர், மாதவரம் தெற்கு பகுதி, 25 வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.நந்தகோபால், 2 வது மண்டலக் குழுத் தலைவர் ஏ.வி.ஆறுமுகம், மாதவரம் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜி.துக்காராம், திருவெற்றியூர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வை.மா.அருள்தாசன், சோழவரம் ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன், புழல் ஒன்றியக் கழகச் செயலாளர் அற்புதராஜ், வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர் தயாளன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.டி.குமார், முன்னாள் மாவட்ட செயலாளர், மாமன்ற உறுப்பினர் தா.இளைய அருணா, பெரம்பூர் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன், பெரம்பூர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் அ.முருகன், கொளத்தூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எஃப். முரளிதரன், கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் மணிபாலன், கும்மிடிப்பூண்டி பேரூர் செயலாளர் அறிவழகன், சோழவரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வசேகரன், மீஞ்சூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர்கள் நந்தினி சண்முகம், உதயா ராஜேந்திரன், காசிநாதன், ஏ.சந்திரன், கனிமொழி ஏழுமலை, திருமலை துரைசாமி, கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் தேவஜவகர், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, அமுதம் பாஸ்கர், மகேந்திரன், வட்டக் கழகச் செயலாளர்கள்,

கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்

---

# தி .மு.க. மாணவர் அணி சார்பில் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

முதலமைச்சர், **கழகத் தலைவர்** அவர்களின் உத்தரவுப்படி, துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழிகாட்டுதலின் பேரில், **"தி.மு.க மாணவர் அணி மாவட்ட, அமைப்பாளர்கள் மற்றும், பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் கலந்தாலோசனைக் கூட்டம்" வருகிற 06.09.2025 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணாசாலை, அன்பகம் "அண்ணா மன்றத்தில்"** மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அனைத்து மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநில அமைப்பாளர் மட்டும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: **உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ் மாணவர் மன்றம் அமைப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18.
நாள்: 01.09.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

---

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு143, நொளம்பூர் சன்னதி முதல் குறுக்குத் தெருவில் கூவம் ஆற்றின் குறுக்கே முடியும் தருவாயில் உள்ள உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணியினை நேற்று மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வட்ட செயலாளர் சசிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

